# பல்லூடகங்களில் திருக்குறள் மேலாண்மை

**ல.சின்னச்சாமி & முனைவர் மீ.மெஹ்முதா**
**[1] ஆய்வியல் நிறைஞர் ஆய்வாளர், [2] நெறியாளர்**
**ஸ்ரீ கிருஷ்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரி**
**குனியமுத்தூர்**
**கோவை - 641 008**

11

**ஆய்வுச்சுருக்கம்**

பல்லூடகம் (Multimedia) என்பது பல வகையான வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்துவதாகும். இந்தச் சொல்லானது அச்சிடப்பட்ட அல்லது கையால் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய வடிவங்களை மட்டுமே பயன்படுத்துகின்ற ஊடகத்திலிருந்து வேறுபடுகிறது. பல்லூடகம் என்பது உரை, ஒலி, அசையாப் படங்கள், இயங்குபடம், நிழற்படம் மற்றும் இடைக்காட்சி உள்ளடக்கப் படிவங்கள் ஆகியவற்றின் இணைவைக் கொண்டிருக்கிறது.

பல்லூடகம் என்பது வழக்கமாகக் கணினி மயமாக்கப்பட்ட மற்றும் மின்னணு சாதனங்கள் போன்ற தகவல் உள்ளடக்க, செயலாக்கச் சாதனங்கள் மூலமாகப் பதிவுசெய்து இயக்கப்படுகிறது அல்லது காண்பிக்கப்படுகிறது. பல்லூடகம் நுண்கலையில் கேட்பொலியைச் சேர்ப்பதன் மூலமாகக் கலப்பின ஊடகத்திலிருந்து வேறுபடுகின்றது. பல்லூடகத்தை நேரோட்ட வகையான திரைப்பட விளக்கக் காட்சி மற்றும் நேரற்ற வகையான கணினி விளையாட்டுடன் பயன்படுத்தலாம். பல்லூடக விளக்கக் காட்சிகள் நேரடியாக அல்லது பதிவு செய்யப்பட்டதாக இருக்கும். பல்லூடக விளக்கக் காட்சிகளை மேடை, திரைப்படக் கருவி, பரப்புதல் ஆகியவற்றில் நேரடியாகப் பார்க்கலாம். அல்லது ஊடக இயக்கி கொண்டு இயக்கப்படலாம். இலக்கமுறை நிகழ்நிலை பல்லூடகத்தைப் பதிவிறக்கம் செய்யலாம். காணொளி என்பது பெரும்பாலும் நிழற்படக்கலை இயக்கத்தை உருவகப்படுத்த படங்களின் இயங்கு படத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பயன்படுகிறது. இக்கட்டுரை பல்லூடகங்களில் திருக்குறள் மேலாண்மை கருத்துக்ள எவ்வாறு ஆராயப்பட்டுள்ளது என்பதை மையமாகக் கொண்டு அமைந்துள்ளது.

**திறவுச்சொற்கள்:** பல்லூடகங்களில் திருக்குறள், இசை வடிவில் திருக்குறள் (MP3குறுவட்டு), கணினி மென்பொருள் வடிவில் திருக்குறள், மின்நூலக வடிவில் திருக்குறள், கைப்பேசியில் திருக்குறள், ஓலைச்சுவடிகளில் திருக்குறள், அச்சு வடிவில் திருக்குறள், இணைய வெளியில் திருக்குறள், செம்மொழி மாநாட்டு இலச்சினை வானுயர்ந்த சிலை குறள் பரப்பும் பட்டுச்சேலை திருவள்ளுவர் கழகங்கள் தென்காசித் திருவள்ளுவர் கழகம் மதுரைத் திருவள்ளுவர் கழகம், உலகத் திருக்குறள் மையம, குறள் மலைச் சங்கம்

**முன்னுரை**

மனிதராகப் பிறந்தோர் ஒருவரையொருவர் நேசித்து வாழ்தல் வேண்டும். பிறரை நேசித்து

வாழ நற்குணங்களால் மனம் நிறைந்திருக்க வேண்டும். திருக்குறள் மனிதர்களை ஆற்றுப்படுத்தும் ஒரு மனவள நூலாகும். தற்காலச் சமூகச் சூழலில் மலிந்துவிட்ட மனச்சிக்கல்களைப் போக்கவும், பெருகிவிட்ட குற்றங்களை வேரோடு களையவும் திருக்குறள் போன்ற அற இலக்கியங்களைச் சமூகப் பரவலாக்க வேண்டும். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடின்றி, குறள் நெறிகளை அனைவரும் கற்று, அதன்படி வாழ முயற்சி மேற்கொள்ளவேண்டும். வள்ளுவம் தழைத்தோங்குவதற்கான வழிமுறைகளை ஆராய்ந்து, செயல்படுத்த வேண்டும். வள்ளுவத்தை வளர்ப்பதற்கான பல்லூடகங்களில் திருக்குறள் மேலாண்மை வழிமுறைகளை ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பல்லூடகங்களில் திருக்குறள்**

பல்லூடகம் (Multimedia) என்பது பல வகையான வேறுபட்ட ஊடகங்களைப் பயன்படுத்துவதாகும். இந்தச் சொல்லானது அச்சிடப்பட்ட அல்லது கையால் தயாரிக்கப்பட்ட பாரம்பரிய வடிவங்களை மட்டுமே பயன்படுத்துகின்ற ஊடகத்திலிருந்து வேறுபடுகிறது. பல்லூடகம் என்பது உரை, ஒலி, அசையாப் படங்கள், இயங்குபடம், நிழற்படம் மற்றும் இடைக்காட்சி உள்ளடக்கப் படிவங்கள் ஆகியவற்றின் இணைவைக் கொண்டிருக்கிறது.

பல்லூடகம் என்பது வழக்கமாகக் கணினி மயமாக்கப்பட்ட மற்றும் மின்னணு சாதனங்கள் போன்ற தகவல் உள்ளடக்க, செயலாக்கச் சாதனங்கள் மூலமாகப் பதிவுசெய்து இயக்கப்படுகிறது அல்லது காண்பிக்கப்படுகிறது. பல்லூடகம் நுண்கலையில் கேட்பொலியைச் சேர்ப்பதன் மூலமாகக் கலப்பின ஊடகத்திலிருந்து வேறுபடுகின்றது. பல்லூடகத்தை நேரோட்ட வகையான திரைப்பட விளக்கக் காட்சி மற்றும் நேரற்ற வகையான கணினி விளையாட்டுடன் பயன்படுத்தலாம். பல்லூடக விளக்கக் காட்சிகள் நேரடியாக அல்லது பதிவு செய்யப்பட்டதாக இருக்கும். பல்லூடக விளக்கக் காட்சிகளை மேடை, திரைப்படக் கருவி, பரப்புதல் ஆகியவற்றில் நேரடியாகப் பார்க்கலாம். அல்லது ஊடக இயக்கி கொண்டு இயக்கப்படலாம். இலக்கமுறை நிகழ்நிலை பல்லூடகத்தைப் பதிவிறக்கம் செய்யலாம். காணொளி என்பது பெரும்பாலும் நிழற்படக்கலை இயக்கத்தை உருவகப்படுத்த படங்களின் இயங்கு படத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டப் பயன்படுகிறது.

**இசை வடிவில் திருக்குறள் (MP3குறுவட்டு)**

திருக்குறளுக்கு எத்தனையோ பேர் விளக்கவுரை எழுதி இருந்தாலும் நம்மில் பெரும்பாலோர் எதையும் முழுமையாக வாசிப்பது இல்லை. விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலர் மட்டுமே சில விளக்கவுரைகளை மடடுமே கற்றுத் தெளிந்தவர்களாக இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று சிந்திப்போமானால், நாம் படிக்கும் செய்திகள் நம் மனதில் முழுமையாகப் பதிவதில்லை. அதே சமயம் நாம் கேட்கும் செய்திகள் நம் மனதில் முழுமையாகப் பதிந்துவிடுகின்றன. அதனைப் போலவே பலவிதமான பாடல்களும் நாம் கேட்பதன் மூலமாகவே

நன்கு மனதில் பதிகின்றன. படிக்கும் வரிகளை மனதில் பதிப்பதும், மீண்டும் நினைவுபடுத்தி எடுப்பதும் சற்றே கடினம். ஆனால் கேட்கின்ற வரிகளைச் சுலபமாக நினைவில் ஏற்றிக் கொள்ளலாம். அதேபோல மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருவதும் சுலபம்.

'கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை" (குறள் 414)

குழந்தைகள் கற்பதற்கு வெகு முன்னமேயே கேட்கத் தொடங்கி விடுகின்றனர் என்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும். அதனாலேயே கற்றலின் கேட்டல் நன்று என்றார்கள். திருவள்ளுவரும் ~செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்றார். இசையின் மூலமே திருக்குறளைப் போன்ற பல நல்ல இலக்கியங்களை மக்கள் மத்தியில் பரப்ப இயலும்.

இதற்கான முயற்சிகளும் தற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏழு பெண்களும் ஏழு ஆண்களும் அடங்கிய இரு குழுக்கள், ஒவ்வொன்றும் மாறிமாறி ஐந்தைந்து அதிகாரங்களாக எளிமையான இசையில் 1330 குறட்பாக்களையும் பாடியிருக்கிறார்கள். ஒவ்வொரு அதிகாரத்தின் தலைப்பும் சொல்லப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு அதிகாரமும் சுமார் ஒன்றரை நிமிடங்கள் இசைக்கப்படுகின்றன. மொத்தக் குறட்பாக்களையும் கேட்க ஆகும் நேரம் சுமார் மூன்றரை மணிநேரம். குறுந்தகட்டுக்கான முன்னுரையை அன்பு கூர்ந்து வழங்கியிருப்பவர் திருச்சி திருவள்ளுவர் தவச்சாலையைச் சார்ந்த தமிழ்த்திரு அய்யா இளங்குமரனார் அவர்கள்.

சேலம் மாவட்டம், சங்ககிரி அருகே உள்ள கத்தேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியை பங்கஜம் திருக்குறளை ஒலி, ஒளி வடிவத்தில் குறுந்தகட்டில் கொண்டு வந்திருக்கிறார். அறத்துப்பாலில் வரும் குறள்களை தன்யாசி இராகத்திலும், பொருட்பால் குறள்களை ரேவதி இராகத்திலும், இன்பத்துப்பாலை அம்சநந்தினி இராகத்திலும் பாடியுள்ளார். எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் விளக்கப்படங்கள் மட்டுமின்றி, குறளுக்கான விளக்க உரையும் குறுந்தகட்டில் இடம் பெறுகிறது.

இதுபோன்ற பல்வேறு குறுந்தகடுகள் குறட்பாக்களை இசைவடிவில் கேட்போர் செவிகளில் இனிமையாகக் கொண்டு சேர்க்கின்றன. சில குறுந்தகடுகள் குறளும் அதற்கான பொருளும் தருகின்றன. இவற்றை அனைவரும் பயன்படுத்தக் தக்கதாக மாற்றுவதில்தான் இதன் வெற்றி அடங்கியுள்ளது.

**கணினி மென்பொருள் வடிவில் திருக்குறள்**

குறளமுது என்ற மென்பொருளைச் சென்னைக் கவிகள் என்ற நிறுவனம் வெளியிட்டிருக்கிறது. சுயமாகச் செயல்படுத்தும் கணினி அடிப்படையிலும் உள்கட்டமைப்புத் தொடர்பிலும் இந்த மென்பொருளை பல்லூடகமாகக் காட்சியமைப்பு, ஒலி ஆகிய வகையில் பயன்படுத்தலாம். தினம் ஒரு குறள் என்கின்ற அடிப்படையில் கணினியை முதன்முறை

இயக்கும்பொழுது சிறப்பான இனிய இசையுடன் ஒரு திருக்குறள் ஒலிக்கும். எந்த ஒரு வேலையையும் தொடங்குவதற்கு முன்பு இறைவணக்கம் செய்வது போல, பணியாளர்கள் ஒழுங்கு முறையில் நின்றவுடன் தமிழ்மறையாம் திருக்குறளை ஒலிக்கச் செய்து பின்பு பணியைத் தொடங்கும் இந்த நல்ல முயற்சி அனைத்துத் தனியார் மற்றும் அரசு நிறுவனங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டால் இன்னும் சிறப்பாக வள்ளுவத்தை அனைவரும் அறிய இயலும்.

இந்த மென்பொருளில் வரைகலை தொழில்நுட்ப உதவியுடன், எளிதில் பகுத்துணர்ந்து கொள்வதற்காகப் பொதுவான திருக்குறள்களை உணர்த்தும் பொருட்டு வள்ளுவர் கோட்ட சித்திரத்தையும், குறளும் மருத்துவமும் என்கின்ற தலைப்பின் கீழ் வரும் குறள்களை உணர்த்தும் பொருட்டு கீழ்ப்பாக்கம் மருத்துவமனைச் சித்திரத்தையும், நூலகம் என்கின்ற தலைப்பின் கீழே வரும் குறள்களை உணர்த்தும் பொருட்டு கன்னிமரா நூலகச் சித்திரத்தையும், குறளும் சட்டமும் என்கின்ற தலைப்பின் கீழ் வரும் குறள்களை உணர்த்தும் பொருட்டு உயர்நீதி மன்றச் சித்திரத்தையும், மென்பொருளிலிருந்து வெளியேற வங்காள விரிகுடாவில் ஒரு தோணி சித்திரத்தையும் வரைந்து வகைப்படுத்தி உள்ளனர்.

வள்ளுவர் கோட்டத்திலுள்ள திருக்குறள்களைக் காணுங்கால் தமிழில் குறளுடன் உரையும், ஆங்கிலம், பிரெஞ்ச் மற்றும் மலாய் மொழி மாற்றமும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு குறளையும் ஒலியுடன் கேட்பது மட்டுமின்றி, அதனுடைய மொழிமாற்றத்தையும் கேட்டு இன்புறலாம். திருக்குறளுக்கு உரை எழுதிய சிறந்த உரையாசிரியர்களின் உரையையும் காணலாம். கீழ்ப்பாக்கம் மருத்துவமனைச் சித்திரம் சுட்டும் குறளும் மருந்தும் காணுங்கால், திருவள்ளுவர் ஒரு மருத்துவர், எயிட்ஸஹ், இல்லறமும் மனநலமும், நீரிழிவு நோயும் திருக்குறளும் என்ற தலைப்பின் கீழ் தகுதியான குறள்கள் காட்டப்பட்டுள்ளன.

கன்னிமரா நூலகச் சித்திரத் தலைப்பின் கீழ், உரைநூல்கள், மொழிமாற்றம், தேடுக, சினிமா போன்ற தலைப்புகளில் பல்வேறு தகவல்கள் தரப்பட்டுள்ளன. தேடுக தலைப்பின் கீழ் சொல், அணி, எண் என்று தேடுதலை எளிதாக்கியுள்ளது. சினிமா என்ற தலைப்பின் கீழ் திருக்குறள் எவ்வாறெல்லாம் திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்ற திரைக்காட்சிகள் தொகுக்கப்பட்டுள்ளன. உயர்நீதிமன்ற சித்திரம் என்ற தலைப்பின் கீழ், திருக்குறளும் அமைச்சியலும், திருக்குறளும் மக்களாட்சியும், திருக்குறளும் சமூகவியல் குற்றங்களும், திருக்குறளும் நீதிமுறையும் ஆகிய தலைப்புகளில் தகுதியான குறள்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

மேற்கண்ட இந்த மென்பொருள் அனைத்துப் பள்ளி, கல்லூரிகளுக்கும் பயன்படும் விதத்தில் அரசாங்கம் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

**மின்நூலக வடிவில் திருக்குறள்**

தமிழ் இணையக் கல்விக் கழக வலை தளத்தின் மூலம், மொழிபெயர்ப்புகளும், உரைகளும் இருப்பது மிகவும் பயனுடையது. முகப்பில் குறள் அமுதம் என்னும் தலைப்பில் திருக்குறள் இடம்

பெற்றுள்ளது கூடுதல் சிறப்பாகும். இதில் பரிமேலழகர் உரை, பாவாணர் உரை, கலைஞர் உரை எனப் பல உரைகள் உள்ளிடப்பட்டுள்ளன. போப் அடிகளார் மற்றும் சுத்தானந்த பாரதியாரின் ஆங்கில மொழிபெயர்ப்புகளும் உள்ளன. ஒலி வடிவில் கேட்கும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

**கைப்பேசியில் திருக்குறள்**

திருக்குறளைச் செல்பேசிகளில் எடுத்துச் செல்லும் வண்ணம் தரவிறக்கம் செய்யும் வாய்ப்புகள் இணையத்தில் உள்ளன. செவிகட்புலனத்தில் திருக்குறளுக்கென தனியான குழுக்கள் உருவாக்கப்பட்டு, அதன் வாயிலாக தினம் ஒரு குறள் என்று குறளும் பொருளும் வழங்கப்படுகின்றன. உரையாக, காட்சியாக, கதையாகப் பல வடிவங்களில் வழங்கப்படுகின்றன.

**ஓலைச்சுவடிகளில் திருக்குறள்**

இரண்டே அடிகளில் வாழ்க்கைத் தத்துவங்களை வாரிவழங்கும் திருக்குறள், இப்போது நம் விரல் நுனிகளில் வந்துள்ளது. இந்த மென்பொருளைப் பதிவிறக்கம் செய்து தேவைப்படும் பொழுது கணினித் திரையில் திருக்குறளை உலாவ விடலாம். இதைப் பதிவிறக்கம் செய்வதற்கான வலைதளம்.

http:/ srimatam.ning.com/profiles/blog/show>id=826742% 3A Blogpost% 3A922.

**அச்சு வடிவில் திருக்குறள்**

ஆரம்பத்தில் ஓலையில் இருந்த திருக்குறளை அச்சுக்குக் கொண்டு வந்தது அச்சுப்பொறி. தமிழ் இலக்கிய நூல்களில் திருக்குறளும் நாலடியாரும் தான் தமிழ் மொழியில் அச்சு வடிவில் முதன்முதலில் 1812 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டன. அச்சு ஊடகத்தின் வாயிலாக, பல்வேறு மலிவு விலைப் பதிப்புகள் வெளியிடப்பட்டு, திருக்குறள் பரவலாக்கப்பட்டுள்ளது.

**இணைய வெளியில் திருக்குறள்**

இணையம் ஒரு பன்மொழி ஊடகம் என்று சொல்கிறபோது அதில் வேறு பல உண்மைகளும் அடங்கியிருக்கின்றன. இணையம் பல புதுமைகளைப் பெற்றிருக்கிறது. மனித இனத்தின் முதல் பன்மொழி ஊடகம் என்று இது அழைக்கப்படுகிறது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தொலைத்தொடர்பு என்கிற இரு தொழில்நுட்பத் துறைகளும் கைகோர்த்ததால் கிடைத்தது இணையம். உலக அளவில் பல மொழிகளில் பல வடிவங்களில் திருக்குறள் பரவியுள்ஹ்ளது. ஓலைச் சுவடியில் இருந்த திருக்குறள் அச்சுவடிவம் கண்டதுபோல் இணைய வெளியிலும் பல தளங்களில் பலவாறு பதிப்பிக்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள மக்களுக்குப் பயன்படும் வண்ணம் திருக்குறள் மூலமாகவும், உரையுடனும், மொழிபெயர்ப்புடனும், ஒலி-ஒளி வடிவிலும், அசைவுப் படங்களாகவும், படக்கோப்புகளாகவும், தரப்படுத்தப்பட்ட எழுத்துக்களிலும் உள்ளன.

தினமலர் நாளிதழ்த் தளத்தில் மூலமும் உரையும் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தினமலா, தினமணி நாளிதழ்த் தளத்தில் நாளும் ஒரு திருக்குறள் இடம் பெறுகின்றது. அருகில்

உள்ள பொத்தானை அழுத்தித் திருக்குறளுக்கு உரிய பொருளை அறிந்து கொள்ளலாம். சில தளங்களில் திருக்குறள் எண்ணைச் சொடுக்கியும் திருக்குறளைக் காணலாம். http://kural.muthu.org/என்ற தளத்தில் திருக்குறள் பயன்படுத்துவதற்கு உரிய எளிய முறையில் உள்ளிடப்பட்டுள்ளது. http://www.thirukkural.com/ என்னும் தளத்தில் எளிமையான அமைப்பில் அனைவரும் பயன்படுத்தும் விதமாக அமைத்துள்ளனர். அகரம் (http://agaram-thirukkural.blogspot.com/) என்னும் தளத்துக்குச் சென்றால் தமிழ் ஆங்கில விளக்கத்துடன் திருக்குறள் சிறப்பாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. செந்தமிழ் (http://senthamil.org) என்னும் தளத்தில் திருக்குறளின் முதற்சீர் மட்டும் குறியீட்டுச் சொல்லாக அமைந்துள்ளது. ஆச்சார்யா என்னும் தளத்தில் (http://acharya.iitm.c.in/tamil/kural/kural/-browse-php) உள்ள திருக்குறள் யாவும் மூலமும் ஆங்கில உரையும் கொண்டதாக உள்ளன. தமிழின் வழிகாட்டி (http://www.tamilsguide.com) இணைய தளத்தில் தினம் ஒரு திருக்குறள் என்னும் தலைப்பில், தமிழ்ஹ், ஆங்கிலம் என்னும் இரு மொழிகளில் திருக்குறளை அறிந்து கொள்ளலாம். பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள திருக்குறள் பற்றி அறிய http://nvkasharaf.co.cc/nvkasharafkur-trans/languages.htm என்னும் தளத்திற்குச் செல்லவேண்டும். இதில் சௌராட்டிரமொழி, இந்தி, வங்காளம், குஜராத்தி, ஒரியா, மராத்தி, தெலுங்கு, அரபி, உருது, சீனம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஸஹ்பானிஷஹ், சுவீடிஷஹ் எனப் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள விவரங்களை ஓரிடத்தில் பெறலாம். திருக்குறள் ஒலிப்பதிப்பு http://universale publishers.com/ என்னும் தளத்தில் உள்ளது. செம்மொழித் தமிழாய்வு, மத்திய நிறுவனத்தின் நிதியுதவியுடன் சென்னையில் உள்ள தமிழ் மையம் திருக்குறளின் 330 குறட்பாக்களை 50 பாடல்களாக உருவாக்கியுள்ளது.

**செம்மொழி மாநாட்டு இலச்சினை**

2010 ஆம் ஆண்டு, ஜீன் 23 முதல் 27 வரை கோவையில் நடைபெற்ற செம்மொழி மாநாட்டிற்கு வடிவமைக்கப்பட்ட இலச்சினை திருக்குறளுக்குப் பெருமை சேர்ப்பதாக உள்ளது. திருவள்ளுவரின் உருவப்படத்திற்குக் கீழ் ~பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்| என்று எழுதப்பட்டுள்ளது. 23.10.2009 இல் வெளியிடப்பட்ட இந்தச் செம்மொழி மாநாட்டு இலச்சினை, அன்று முதல் அரசு அழைப்பிதழ்கள், அலுவலகங்கள், பேருந்துகளில் இடம் பிடிக்கத் துவங்கிவிட்டது.

**வானுயர்ந்த சிலை**

வள்ளுவப் பெருந்தகை மனிதகுலத்திற்கு அளித்த பெருங்கொடை திருக்குறள். உலகப் பொதுமறையாகப் போற்றப்படும் அறநூலை வடித்த வாழ்க்கை ஞானி, என்றும் வாழும் தவமுனி வள்ளுவனுக்கு கன்னியாகுமரியில் முக்கடல் நடுவே வானுயர்ந்த சிலை வடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சிலை 95 அடி உயரம் கொண்டு 38 அடி உயர பீடத்தின் மீது அமைந்துள்ளது. வலக்கையில் அறம், பொருள், இன்பம் என்ற முப்பாலை முத்திரையாகப் பிடித்து இடக்கையில் திருக்குறள் ஏட்டினைத் தாங்கி கருணை பொழியும் பார்வையுடையதாக விளங்குகிறது.

எக்காலத்தும் எல்லா மக்கட்கும் பொருந்தும் நீதிநெறிகளை அருளிய செய்தியை பேசும் உதடுகளால் உணர்த்தி, குறள் ஏட்டினைச் சுற்றி வைக்காது திறந்து வைத்து அதன் இடையறாத் தேவையினைச் சுட்டிக்காட்டி, சுவடியால் திருக்குறளின் தொன்மை உணர்த்தப்பட்டுள்ளது. சுவடியின் மீது திருக்குறள் எனும் சொற்றொடர் பொறிக்கப்பட்டுள்ளது.

திருக்குறள் 1330 பாக்களை 133 அதிகாரங்களில் அடக்கி வைத்து தமிழர்தம் நெறி காட்டும் அரியதொரு நீதிநூலாய் விளங்குகிறது. 38 அதிகாரங்கள் அறத்தை உணர்த்துகின்றன. எஞ்சிய 95 அதிகாரங்கள் பொருளையும் இன்பத்தையும் உணர்த்துகின்றன. ஆகையால், அறத்துப்பால் பகுதியை 38அடி உயரம் கொண்ட அறப்பீடமாகவும், பொருளும் இன்பமும் கொண்ட 95 அடி உயரம் கொண்ட வள்ளுவர்தம் திருமேனியாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது. அறத்தை ஆதாரமாகக் கொண்டு பொருளும் இன்பமும் துய்க்கப்பட வேண்டும் என்ற சீரிய கருத்தை பீடமும் சிலையும் ஒருசேர வெளிப்படுத்துவதாக உள்ளது. மொத்தத்தில் 133 அதிகாரங்களைக் கொண்டு விளங்கும் திருக்குறள் 133 அடி கொண்ட சிலையாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது.

அறமே பீடமாகி, பொருளும் இன்பமும் உருவமாகி மிளிரும் நுட்பத்தை 133 அடி உயர சிலை காட்டுகிறது. தமிழகத்தின் தென்கோடியில் கடலலைகளின் ஆரவாரத்திற்கு இடையே அமைந்திருக்கும் இந்தச் சிலை வள்ளுவத்தின் புகழையும் பெருமையையும் வானுயரப் பறைசாற்றி நிற்கிறது.

**குறள் பரப்பும் பட்டுச்சேலை**

கோ-ஆப்டெக்ஸஹ் நிறுவனத்துடன் இணைந்து சிறுமுகை ஸ்ரீராமலிங்க சவுடாம்பிகை கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கக் கைவினைக் கலைஞர்கள் திருக்குறள் பட்டுச்சேலையை வடிவமைத்துள்ளனர். தெய்வப்புலவர் திருவள்ளுவரையும் திருக்குறளையும் மையமாகக் கொண்டு இந்தப் பட்டுச்சேலை நெய்யப்பட்டுள்ளது. பட்டுச்சேலையின் முந்தானையில் திருவள்ளுவர் கையில் திருக்குறள் ஓலைச் சுவடி எழுத்தாணி சகிதம் அமர்ந்துள்ளார். முந்தியின் நான்கு புறங்களிலும் நீலநிறப் பின்னணியில் குமரிமுனையில் நெடிதுயர்ந்து நிற்கின்ற வள்ளுவர் சிலையின் திருவுருவம் உள்ளது.

வள்ளுவப் பெருந்தகையின் இருமருங்கிலும் மலர்தூவும் மகளிர் உருவம், சேலையின் கரை முழுக்க சென்னை வள்ளுவர் கோட்டத்தின் சிறப்பு வாய்ந்த தேரின் அமைப்பு வெகுநேர்த்தியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கலைநுணுக்கம் மிக்க பட்டுச்சேலையின் உடல்பகுதி குங்குமச் சிவப்பு வண்ணத்திலும், கரை கருப்பு வண்ணத்திலும் அமைக்கப்பட்டுள்ளது. சேலையில்

முந்தானை இளம் பச்சை நிறத்திலும் திருவள்ளுவரின் பின்புறத்தில் நீலவண்ண உலக உருண்டையும் நேர்த்தியாகக் கலை நயத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்த்திமிகு பட்டுச்சேலையின் உடல்முழுவதும் 1330 குறட்பாக்களும் எண் வரிசைப்படி நுணுக்கமான வரிகளில் முழுமையாக எழுதப்பட்டுள்ளன.

ரூ.70 ஆயிரம் மதிப்புள்ள இந்தப் பட்டுச்சேலை அசல்பட்டும் தங்கச் சரிகையும் கொண்டு 48 அங்குல அகலம், 6.25 மீட்டர் நீளம், 1550 கிராம் எடையும் உள்ளது. 4 மாதம் 4 நாட்களில் உருவாக்கப்பட்ட இந்தப் பட்டுச்சேலை கோவை நேரு விளையாட்டரங்க வளாகத்தில் உள்ள மருதம் கோ-ஆப்டெக்ஸ்ஹ் கடையில் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

**திருவள்ளுவர் கழகங்கள்**

வாழ்வியல் நெறிமுறைகளை, உலகியல் நடப்புகளை, அரசியல் சிறப்புகளை, விஞ்ஞானக் கூறுகளை, எல்லாக் காலத்திற்கும் பொருந்தி வருகின்ற தன்மையில் வள்ளுவர் வழங்கியுள்ள திறம் வெளிநாட்டாரும் அதை வணக்கம் செய்கின்ற தகுதியைத் தந்திருக்கிறது. இத்தகைய திருக்குறளின் பெருமை குறையாமல் இருக்கப் பக்க பலமாய் இருப்பவை, திருவள்ளுவர் பெயரால் இயங்கி வரும் கழகங்கள் ஆகும். குறள் நெறிகளை எங்கும் பரவச் செய்வதே இக்கழகங்களின் நோக்கமாகும்.

**தென்காசித் திருவள்ளுவர் கழகம்**

தென்பாண்டி மன்னர்களின் புகழ் மண்டிக்கிடக்கும் பொதிகை மலைச்சாரலில் திரிகூட மலைக்கருகில் அமைந்துள்ள தென்காசியில் 1927 ஆம் ஆண்டு தோறறுவிக்கப்பட்டதுதான் தென்காசி திருவள்ளுவர் கழகம். தமிழகத்தில் திருக்குறளைப் பரப்பத் தோன்றிய அமைப்புகள் அனைத்திலும் காலத்தால் மூத்ததும் முதன்மையானதும் இக்கழகமே ஆகும்.

தென்காசித் திருவள்ளுவர் கழகம் ஆண்டுதோறும் திருக்குறள் விழா நடத்தி, சொற்பொழிவுகளோடு நின்றுவிடாது, எண்ணங்களை எழுத்துகளாக்கி உரைநடை நூல்களும் வெளியிட்டு வருகிறது. தமிழகத்தின் அறிஞர் பெருமக்கள் எழுதிய சிறந்த நூல்களும் இக்கழகத்தின் வாயிலாக வெளிவருகின்றன. திருக்குறளைப் பரப்புவதில் இக்கழகம் பெரும்பங்காற்றி வருகிறது.

**மதுரைத் திருவள்ளுவர் கழகம்**

ஆலவாய்ச் சொக்கநாதன் அமர்ந்து தமிழாய்ந்த, தலைச்சங்கம் கண்ட மதுரை மண்ணில் வள்ளுவரின் நெறிபரப்பும் ஒரு கழகமாக உருப்பெற்றது மதுரைத் திருவள்ளுவர் கழகம். வள்ளுவர் நெறி பரப்பும் வாழ்வு உடையோராய் விளங்கிய 'திருக்குறள் களஞ்சியம்' தி.ப. சுப்ரமணியதாசு அவர்களின் வேண்டுதலாலும் தூண்டுதலாலும் 1941 ஆம் ஆண்டு தோற்றம் பெற்றது இக்கழகம்.

மக்கள் மத்தியில் திருக்குறள் நெறி வளர்த்தல், திருக்குறளைப் பரப்புதல், மாணவர்களுக்குத் திருக்குறளைக் கற்பித்தல், குறள் நெறித் தலைப்புகளில் பல்வகைப்

போட்டிகளை நடத்திப் பரிசு வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு பணிகளை இக்கழகம் சிறப்பான முறையில் ஆற்றிவருகிறது.

**உலகத் திருக்குறள் மையம்**

உலகத் திருக்குறள் மையம் 1990 ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டது. இந்த அமைப்பு திருக்குறளை வாழ்வியலாக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. வாரந்தோறும் திருக்குறள் வகுப்புகள் நடத்துதல், நாள்தோறும் குறளும் பொருளும் எழுதி வைத்தல், இதழ்கள் வெளியிடுதல், நூல்கள் வெளியீடு என இவ்வமைப்பு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வருகின்றது. மேலும் ஆய்வு, வாழ்வியலாக்கம் என்ற இரண்டு நிலைகளில் திருக்குறளைப் பரப்பி வருகிறது.

இவ்வாறு திருக்குறள் கழகங்கள் மாவட்டந்தோறும் ஏற்படுத்தப்பட்டு, முறையாக நிர்வகிக்கப்பட வேண்டும். குறள் நெறிகளை அனைவரும் பின்பற்றச் செய்யவேண்டும்.

**குறள் மலைச் சங்கம்**

சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வரும் குறள் மலைச் சங்கம், குறட்பாக்களை ஒரு மலை முழுவதிலும் கல்வெட்டுகளாகப் பொறிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்டு, அப்பணியை செவ்வனே ஆற்றி வருகிறது.

ஈரோடு மாவட்டம், கோபி செட்டிபாளையம் வட்டம், மலையப்பாளையத்தில் உள்ள ஒரு மலையில் குறட்பாக்களை கல்வெட்டுகளாகப் பொறிக்கும் பணி நடந்து வருகிறது.

அறிவியலால் ஆளப்படுகின்ற, இயந்திரங்களால் ஆட்டிப் படைக்கப்படுகின்ற, பொருளை மட்டுமே தேடி ஓடுகின்ற மனிதர்களுக்கிடையே வள்ளுவத்தை, வள்ளுவம் காட்டுகின்ற வழியை, அதன் ஒளியைக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற துடிப்பில் முனைந்துள்ளது குறள் மலைச்சங்கம்.

**முடிவுரை**

படிக்கவும், நினைவில் நிறுத்தவும், போற்றவும், துதிக்கவுமான அளவில் வள்ளுவம் கொண்டாடப்பட்டால் அது வெறும் வழிபடுமுறையாகச் சுருங்கிவிடும். வள்ளுவம் வளர்ப்பதற்கு அது ஆரம்பநிலையாக இருக்கலாம். ஆனால் வள்ளுவம் என்பது வழிபடு முறையல்ல; அது வாழ்வியல் நெறியாகும். நமது அன்றாட வாழ்வியல் நடைமுறைகளில் வள்ளுவத்தைப் பின்பற்றுவதன் மூலமே அதனை வளர்க்கவும், பரப்பவும் முடியும்.

'இந்தப் பூவுலகில் அரசுகள் அழியலாம்,
ஆட்சிகள் மாறலாம், கோட்டைகள் இடியலாம்,
கொத்தளம் சரியலாம், பருவங்கள்
தடம் மாறலாம், புவியியல் இடம் மாறலாம்,
சில பறவை விலங்குகள் இனமழியலாம்,

ஆனால் மாறாதியங்குவது மானுடத் தொடர்ச்சி மட்டும்
தான். அந்த மனிதனின் மனம் - வினை இரண்டு
மட்டும்தான் நிலையாத உலகில் நிலைத்த
பொருள்கள். அந்த இருபெரும் பொருள்களையும்
முயன்று செழுமைப்படுத்துவது முடிந்த
அளவு முழுமைப்படுத்துவது என்ற மானுடப்
பெரும்பணியில் தன் உயிரையே எரிபொருளாய்
ஊற்றி ஒளியூட்டியிருக்கிறார் வள்ளுவப்
பெரும்புலவர்... திருக்குறள் வாசிப்போடு
நின்றுவிடக்கூடாதுஹ் வாழ்வியலாக
வேண்டும். உரையாசிரியர்களின் ஊதியமாக
மட்டுமே திருக்குறள் ஓய்ந்துவிடக்கூடாது;
உலகத்தை ஓதுவிக்க வேண்டும்"[1]

என்பார் கவிப்பேரரசு வைரமுத்து.

லியோ டால்ஸஹ்டாய், காந்தியடிகள் போன்ற மகத்தான மனிதர்கள் ஒளிர்வதற்கு வள்ளுவம் பாதை அமைத்துத் தந்திருக்கிறது. உலக சமுதாயம் வள்ளுவத்தால் செம்மையான வாழ்வுநிலை பெறவேண்டும் என்ற உயரிய பொதுநோக்கிலேயே மனிதன் மனிதனாக வாழப் பின்பற்றப்பட வேண்டிய குறள் நெறிகள் ஏட்டுச் சுரைக்காயாகவோ, குறளின்பால் ஆர்வம் கொண்டவர்களுக்காக மட்டுமாகவோ இருந்துவிடக்கூடாது, மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் அறிந்து கொள்ள வேண்டிய அடிப்படை நெறிகளாக இருக்க வேண்டும். பல்லூடகங்களில் திருக்குறள் மேலாண்மை அமையவேண்டும்.

**சான்றெண் விளக்கம்**

1. வைரமுத்து, தமிழாற்றுப்படை, ப. 69.

**பார்வை நூல்கள்**

1. உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு மலர் 2010 – தினகரன்.
2. தி இந்து – தமிழ் நாளிதழ்
3. குறள் மலைச் சங்கம், கல்வெட்டில் திருக்குறள்
4. திருக்குறள் ஆய்வுமாலை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.
5. குறளமுதம், தமிழ் வளர்ச்சித் துறை.
6. விக்கிபீடியா, வலைதளம்.